IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 100/2013 |
| | | D/W's | : | DW1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | கார்த்தி | CASTE | : | |
| S/O. | பாண்டிசேர்வை | RELIGION | : | இந்து |
| VILLAGE | குலசேகரன்கோட்டை | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 38 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.03.2025**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் வழக்கின் 1ம் பிரதிவாதி ஆவேன். வழக்குப்படி அனைத்து விபரங்களும் எனக்குத் தெரியும். வழக்கின் 2ம் பிரதிவாதி பாண்டி என்பவர் வீரப்பன் மகன் என்றால் தெரியாது. மேற்படி நபர் பற்றி தெரிந்து கொண்டே வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்லகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வீரப்பனின் தாயார் பெயர் கருப்பாயிம்மாள் என்றால் சரிதான். எனது அப்பர பெயர் பாண்டி, அவரது அப்பா பெயர் ஆண்டியப்பன்சேர்வை.

2. மேற்படி கருப்பாயிம்மாள் மற்றும் ஆண்டியப்பன்சேர்வை ஆகிய இருவரும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். எனது வீடு உள்ள இடத்தின் பழைய சர்வே எண்.391/6, புதிய சர்வே எண்.580/25. எனது வீட்டுக்கு கிழக்குபுறம் உள்ள வீரப்பன் வீட்டின் சர்வே எண்.580/24 என்றால் சரியல்ல. வாதி வீட்டின் சர்வே எண்.580/27 என்றால் சரிதான். தாவா சந்தின் சர்வே எண்.580/26 என்றால் சரிதான். தென்வடல் வீதிக்கு மேற்குபுறம் தாவா சொத்து உள்ளது என்றால் சரிதான்.

3. தாவா சொத்தின் கீழமேல் நீளம் 16.6 மீட்டர் என்றால் சரிதான். தாவா சொத்தின் தென்வடல் நீளம் 1.7 மீட்டர் என்றால் சரிதான். தாவா சொத்தின் வடபுறம் எனது இடமும், வீரப்பன் வீடும் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் தென்புறம் வாதியின் வீடு உள்ளது என்றால் சரியல்ல பொது சுவர் உள்ளது, அதற்கு அடுத்து வாதியின் வீடு உள்ளது. தாவா சொத்துக்கு தென்புறம் பொது சுவர் இல்லை, வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. தாவா சந்தின் தென்புறம் உள்ள வாதியின் சுவற்றில் எனக்கு உரிமை உள்ளது என்று IA No.450/21 தாக்கல் செய்து தள்ளுபடி ஆகிறது என்றால் சரிதான், அந்த மனுவை மேல் முறையீடு செய்து உத்தரவு ஆகி அதன்படி தனி வழக்கு தாக்கல் செய்து அசல் வழக்கு எண்.99/2022 நிலுவையிலுள்ளது. மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நான் செய்த மேல் முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது, வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. தாவா சந்தின் கிழக்குபுறம் அகலமாகவும், மேற்குபுறம் உள்ளே செல்லும்போது நான் படிக்கட்டு கட்டி ஆக்கிரமிப்பு செய்து உள்ளதால் அகலம் குறைவாக உள்ளது என்றால் சரியல்ல. வாதி வழக்கு சொத்து பொது சந்து என்று பரிகாரம் கேட்ட வழக்கு தாக்கல் செய்து உள்ளார். வழக்கு சொத்து வாதிக்கும், 1,2 பிரதிவாதிக்கும் சொந்தமானது என்றால் சரியல்ல. தாவா சந்து நத்தம் பொது பாதை என்றால் சரியல்ல. தாவா சொத்து எங்கள் வகையறாவுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்று பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.

6. பி.வா.சா.1 உயில் ஆவணத்தின் A Schedule சொத்தின் சர்வே எண்.391/6 ல் நான்குமாலில் நமது வகையறாவுக்கு பாத்தியப்பட்ட பொது சந்தின் வடபுறம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பத்திரம் எழுதுபவர் தவறாக எழுதி உள்ளார். மேற்படி ஆவணத்தை எனது தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து விட்டு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் உள்ளபோது தாவா சந்தின் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டினேன் என்றால் சரியல்ல.

7. பி.வா.சா.2 தானசெண்டில் மெண்ட் பத்திரத்தை 13.03.2013 தேதி எனது அப்பா எனது பெயருக்கு எழுதி வைத்தபின் வழக்கு சொத்தில் வாதிக்கு இடையூர் செய்தேன் என்றால் சரியல்ல. நான் இடையூர் செய்ததால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. பி.வா.சா.2 ஆவணத்தின்படி ஏற்கனேவே இருந்து இடிக்கப்பட்ட தகரவீடு இருந்த காலி இடத்தை எனக்கு எழுதி கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி செண்டில் மெண்ட் பத்திரத்தில் நான்குமாலுக்கு அடுத்து 506 ¼ சதுரடி காலியிடத்தை தான் எனக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் தொடர்ச்சியாக கிழமேல் பொது சந்தின் நடந்து கொள்ளும் உரிமை உள்ளது என்று பத்திரத்தில் உள்ளது சரிதான்.

8. பி.வா.சா.2 பத்திரத்தின் படி எனக்கு காலியிடம் தான் எனக்கு எழுதி தரப்பட்டது வழக்கிற்காக அந்த இடத்தில் வீடு உள்ளதாக பொய்யாக சாட்சி சொல்லிகிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.3 ஆவணத்தின் சொத்து விபரத்தில் நான்குமாலின் தெற்குபுறம் நான்கு அடி பாதை உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது எங்கள் வகையறாவுக்கு பாத்தியப்பட்டது என்று கண்டுள்ளது. பி.வா.சா.4, 5, 6 ஆவணங்கள் வழக்கு தாக்கல் செய்தற்கு பின் உள்ள ஆவணம் என்றால் சரிதான்.

9. பி.வா.சா.7 ஆவணம் வழக்கிற்கு சம்மந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. வழக்கு சந்து வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட பொது நத்தம் சந்து, அதை நான் எங்களுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்று பொய்யாக உரிமை கோரிகிறேன் என்றால் சரியல்ல. பொது சந்தாக இல்லாமல் எங்களுக்கு மட்டும் பாத்தியப்பட்டதாக இருந்தால் அதை பொறுத்து தனியாக வழக்கு தாக்கல் செய்ய வேண்டுமென்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்கள் தாவா சந்து என்றால் சரிதான்.

(மேற்படி புகைப்படங்கள் அதன் குறுந்தகடுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் எதிர் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டு, ஆட்சேபனைக்கு உட்பட்டு வா.சா.ஆ.5 தாக குறியீடு செய்யப்படுகிறது)

10. வா.சா.ஆ.5 புகைப்படத்தின்படி எனது வீடு உள்ள இடத்தில் வழக்கு சொத்து குறுகலாக உள்ளது என்றால் சரியல்ல. வாதி கேட்டுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்க வேண்டும், வழக்கிற்காக தாவா சந்து எங்களுக்கு பாத்தியப்பட்டது பொய்யாக கேட்கிறேன், அது பொது சந்து என்றால் சரியல்ல.

**3 முதல் 5 பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணை:**

1. வழக்கில் எனது தரப்பில் வருவாய் ஆவணம் தாக்கல் செய்து உள்ளேன். வழக்கு சொத்தில் புலப்படத்தை தாக்கல் செய்யவில்லை. புலவரைப்படத்தின் படி வழக்கு சொத்து சந்து என்று உள்ளது, அதை மறைப்பதற்காக புலவரைப்படத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வருவாய் ஆவணத்தின் படி வழக்கு சொத்து சந்து என்று உள்ளது நான் பொய்யாக எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று கேட்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

1. வா.சா.ஆ.5 புகைப்படத்தின் படி தாவா சந்தின் கிழக்குபுறம் உள்ள வாடிப்பட்டி பேரூராட்சிக்கு சொந்தமான தென்வடல் வீதியில் பேரூராட்சி தரப்பில் பேவர் ப்ளாக்கல்

பதிக்கப்பட்டு உள்ளது. தாவா சந்தில் பேவர் ப்ளாக்கல் பதிக்கவில்லை. தாவா சொத்து எனது வகையறாவுக்கு மட்டும் தான் பாத்தியப்பட்டது என்பதால் பேரூராட்சி கல் பதிக்கவில்லை. வருவாய் ஆவணங்களில் சந்து என்று தவறாக உள்ளதை நீக்குமாறு மதுரை மாவட்ட வருவாய் அலுவலகத்தில் மனு கொடுத்து நிலுவையில் உள்ளது.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.